www.agaram.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 2020

### தரம் - 10 | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்

பெயர் / சுட்டெண் : .....................

திரு.க.மகேந்திரன் Spe.Trained(Agri)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

#### அலகு – 01

01. விவசாயத்தின் இருபெரும் பிரிவுகளையும் குறிப்பிடுக?
02. சுயதேவை விவசாயம் என்றால் என்ன?
03. இலங்கை உணவில் தன்னிறைவு பெற பங்களிப்புச் செய்த துறைகள் எவை?
04. நீர்ப்பாசனக் குளங்கள் ஐந்தைக் குறிப்பிட்டு அவற்றை கட்டுவித்த மன்னர்கள் பெயரையும் குறிப்பிடுக?
05. இலங்கை மன்னர்கள் அமைத்த வியத்தகு நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கு மூன்று உதாரணங்கள் தருக?
06. பண்டைய நீர்ப்பாசனக் குளமொன்றின் படம் வரைந்து அதன் முக்கிய பாகங்களைக் குறிப்பிடுக?
07. இலங்கையில் காணப்படும் விவசாயம் சார்ந்த கலாசாரத்திற்கு சன்றுகள் யாவை?
08. பண்டைய காலத்திவ் இலங்கையில் விவசாயம் நிலவியமைக்கான ஆதாரங்கள் 5 இனைக் குறிப்பிடுக?
09. போத்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களால் அறிமுகஞ் செய்யப்பட்ட பயிர் வகைகள் 5 எழுதுக?
10. பிரித்தானியரின் வருகையோடு அறிமுகஞ் செய்யப்பட்ட பயிர் வகைகள் 5 தருக?
11. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் உருவாக்கப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் யாவை?
12. பல்நோக்கு அபிவிருத்தி திட்டங்களின் நோக்கங்கள் 5 குறிப்பிடுக?
13. “பசுமைப்புரட்சி” என்றால் என்ன?
14. பசுமைப்புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் 5 தருக?
15. இலங்கையில் மேற்கொள்ளப்படும் மரபுரீதியற்ற விளைவு உற்பத்திகள் 5 எழுதுக?
16. இலங்கையில் தற்போது நிலவும் நவீன விவசாயக் கோலத்தினைக் குறிப்பிடுக?
17. இலங்கையின் அபிவிருத்தியில் விவசாயம் வகிக்கும் பங்கிற்கு உதாரணம் 5தருக?
18. உணவுக் காப்பு என்றால் என்ன?
19. உணவுக் காப்பில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் எவை?
20. எமது நாட்டின் மொத்த தேசியவுற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் மூன்று துறைகளையும் குறிப்பிடுக?
21. இலங்கையில் விவசாயத்திற்குள்ள வாய்ப்புக்கள் 5 குறிப்பிடுக.
22. இலங்கையில் 1912ஆம் ஆண்டு விவசாயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விவசாயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

#### அலகு – 02

01. பயிர் வளர்வதற்கும் தரமான விளைச்சலை பெறுவதற்கும் அது பயன்படுத்தும் பிரதான இரு சூழல்களையும் குறிப்பிடுக?
02. பயிர் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் முக்கிய சூழல் காரணிகள் அடங்கும் வானிலைக் காரணியைக் குறிப்பிடுக?
03. காலநிலை என்றால் என்ன?
04. பயிர் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடைய வானிலைக் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றினை அளவிடப் பயன்படும் கருவிகளையும் குறிப்பிடுக?
05. ஒரு மழைமானியை ஓர் இடத்தில் நிறுவும் போது கவனிக்க வெண்டிய விடயங்களைக் குறிப்பிடுக?

06. காலநிலைக் காரணிகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் பயிர்ச் செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக?
07. இலங்கையில் மழைவீழ்ச்சி கிடைக்கும் முறைகள் யாவை?
08. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் காலத்தினையும் அக்காற்றினால் மழைப் பெறும் பிரதேசங்களையும் எழுதுக?
09. தென்மேல் பருவக்காற்று வீசும் மாதங்களையும் அக்காற்றினால் மழையைப் பெறும் பிரதேசங்களையும் எழுதுக?
10. உலர் வலயத்திற்கான மழைவீழ்ச்சிப் பரம்பலைக் காட்டும் கோலத்தின் வரைபினை வரைந்து காட்டுக?
11. வெவ்வேறு பிரதேசங்களில் வெப்பநிலை வேறுபடுவதற்கான காரணிகளைக் குறிப்பிடுக?
12. பயிர்ச் செய்கையில் காற்றினால் ஏற்படும் பயன்கள் எவை?
13. அதிக காற்றினால் பயிர்ச்செய்கையில் ஏற்படும் பாதக விளைவுகள் யாவை?
14. இலங்கையில் முக்கிய மழைவீழ்ச்சி வலயங்கள் மூன்றினையும் குறிப்பிட்டு அவை பெறும் வருடாந்த மழைவீழ்ச்சி அளவையும் எழுதுக?
15. விவசாய சூழலியல் வலயங்கள் வகைப்படுத்தப்பட்டதன் முக்கியத்துவங்கள்?

## அலகு – 03

01. பயிர் வளர்ச்சியில் பிரதான ஊடகமாக விளங்கும் "மண்" வகிக்கும் பங்களிப்புக்கள் யாவை?
02. "மண்ணுருவாதல்" என்றால் என்ன?
03. மண்ணுருவாவதற்கு அடிப்படையாக விளங்கும் பாறைகள் எவை?
04. "உருமாறிய பாறைகள்" எவ்வாறு தோற்றம் பெறும்?
05. உருமாறிய பாறைக்கு உதாரணங்கள் சில குறிப்பிடுக?
06. பாறைகளைச் சிதைவடையச் செய்யும் பௌதீகக் வானிலைக் காரணிகளைக் குறிப்பிடுக?
07. இரசாயன வானிலையாவழிதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

08. மண் பக்கத் தோற்றத்தை வரைந்து அவற்றின் பருமனுக்கேற்ப வகைப்படுத்திக் காட்டுக?
09. மண்ணின் கூறுகள் யாவை?
10. மண் கனிப்பொருட்கூறுகளை அவற்றின் பருமனுக்கேற்ப வகைப்படுத்திக் காட்டுக?
11. பயிர்ச்செய்கைக்குகந்த மண்ணில் காணப்படும் கூறுகளை சதவீதத்தினடிப்படையில் குறிப்பிடுக?
12. மண் சேதனப் பொருட்களின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக?
13. மண் வளியின் அவசியத்தைக் குறிப்பிடுக?
14. மண்ணீர் வகைகள் யாவை?
15. மண்ணீர் மட்டங்களை வரைபடத்ததின் உதவியுடன் குறிப்பிடுக?
16. தாவரம் காட்டும் தற்காலிக வாடல் நிலை என்றால் என்ன?
17. நிதந்தர வாடல் நிலை என்றால் என்ன?
18. மண்ணீரின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக?
19. மண் அங்கிகளுக்கு உதாரணம் 5 குறிப்பிடுக?
20. மண்ணின் இயல்புகள் யாவை?
21. மண்ணின் பௌதீக இயல்பில் அடங்கும் விடயங்கள் யாவை?
22. மண்ணின் இழையமைப்பை துணிவதற்கான பிரசோதனை அமைப்பினை படம் கீறி விளக்குக?
23. மண் இழையமைப்பின் முக்கியத்துவங்கள் யாவை?
24. மண் கட்டமைப்பு என்றால் என்ன?
25. மண்ணின் நிறத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக?
26. முக்கியமான மண்ணின் இரசாயன இயல்புகள் யாவை?

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

27. மண் அமிலத் தன்மையடைவதற்கான காரணிகளைக் குறிப்பிட்டு அமில மண்ணைத் திருத்துவதற்கான வழிமுறைகளையும் எழுதுக?
28. மண்ணின் காரத்தன்மையை நீக்கும் வழிகள் குறிப்பிடுக?
29. கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளவு என்றால் என்ன?
30. இலங்கையில் அதிகளவு பரவியுள்ள மண்வகைகள் யாவை?
31. உலர்படலத்தில் காணப்படும் மண் வகைகளைக் குறிப்பிடுக?
32. மண் வளம் குன்றுவதற்கான காரணிகள் யாவை?
33. மண்ணரிப்பு என்றால் என்ன?
34. மண்ணரிப்பின் மூன்று படிமுறைகளையும் குறிப்பிடுக?
35. மண்ணரிப்பிற்கான காரணிகள் யாவை?
36. மண்ணரிப்பைத் தவிர்க்கக்கூடிய வழிமுறைகள் யாவை?
37. ஓடிவழியும் நீரின் வேகத்தைக் குறைப்பதற்கான நுட்பங்கள் யாவை?
38. மழைத்துளிகள் மண்ணில் வேகமாக விழுவதைக் குறைப்பதற்கான நுட்பங்கள் யாவை?

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk